## ஜனவரி – 25 – வியாழன்

### புனித பவுல் அடிகளாரது மனமாற்றம்

### பிற இனத்தாரே! நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்! திபா. 117:1

---

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 22:3–16**

அக்காலத்தில் பவுல் மக்களை நோக்கிக் கூறியது: ”நான் ஒரு யூதன் சிலிசியாவிலுள்ள தர்சு நகரத்தில் பிறந்தவன் ஆனால் இந்த எருசலேம் நகரில் வளர்க்கப்பட்டவன் கமாலியேலின் காலடியில் அமர்ந்து நம் தந்தையரின் திருச்சட்டங்களில் நுட்பமாகப் பயிற்சி பெற்றவன் நீங்கள் அனைவரும் இன்று கடவுள் மீது ஆர்வம் கொண்டுள்ளது போன்று நானும் கொண்டிருந்தேன். கிறிஸ்தவ நெறியைச் சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் கட்டிச் சிறையிலடைந்தேன் சாகும் வரை அவர்களைத் துன்புறுத்தினேன். தலைமைக் குருவும் மூப்பர் சங்கத்தாரும் இதற்குச் சாட்சி. இவர்களிடமிருந்து தமஸ்கு நகரிலுள்ள சகோதரர்களுக்குக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டு அங்குள்ள கிறிஸ்தவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வந்து தண்டிப்பதற்காக அங்குச் சென்றேன். நான் புறப்பட்டுத் தமஸ்கு நகரை நெருங்கியபோது நண்பகல் நேரத்தில் திடீரென வானிலிருந்து ஒரு பேரொளி என்னைச் சூழ்ந்து வீசியது. நான் தரையில் விழுந்தேன். அப்போது, ”சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?” என்ற குரலைக் கேட்டேன். அப்போது நான், ”ஆண்டவரே நீர் யார்?” என்று கேட்டேன். அவர், ”நீ துன்புறுத்தும் நாசரேத்து இயேசு நானே” என்றார். என்னோடி ருந்தவர்கள் ஒளியைக் கண்டார்கள் ஆனால் என்னோடு பேசியவரது குரலைக் கேட்கவில்லை. ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?” என நான் கேட்க, ஆண்டவர் என்னை நோக்கி, ”நீ எழுந்து தமஸ்குவுக்குச் செல். நீ செய்வதற்கென குறிக்கப்பட்டுள்ளவை அனைத்தும் அங்கே உனக்குக் கூறப்படும்” என்றார். அந்த ஒளியின் மிகுதியால் நான் பார்க்க முடியவில்லை. என்னோடியிருந்தவர்கள் எனது கையைப் பிடித்துத் தமஸ்குவினுள் அழைத்துச் சென்றார்கள். அங்கு அனனியா என்னும் ஒருவர் இருந்தார். அவர் திருச்சட்டத்தைக் கடைப்பிடித்து கடவுளுக்கு அஞ்சி வாழ்ந்தவர் அங்கு வாழ்ந்து வந்த யூதர் அனைவரிடமும் நற்சான்று பெற்றவர். அவர் என்னிடம் வந்து அருகில் நின்று, ”சகோதரர் சவுலே, மீண்டும் பார்வையடையும்” என்றார். அந்நேரமே நான் பார்வை பெற்று அவரைப் பார்த்தேன். அப்போது அவர், ”நம் மூதாதையரின் கடவுள் தம் திருவுளத்தை அறியவும் தம் நேர்மையாளரைக் காணவும் தம் வாய்மொழியைக் கேட்கவும் உம்மை ஏற்படுத்தியுள்ளார். ஏனெனில், நீர் கண்டவைகளுக்கும் கேட்டவைகளுக்கும் அனைவர் முன்பும் நீர் சாட்சியாய் இருக்க வேண்டும். இனி ஏன் காலம் தாழ்த்த வேண்டும்? எழுந்து அவரது திருப்பெயரை அறிக்கையிட்டு உமது பாவங்களிலிருந்து கழுவப் பெற்றுத் திருமுழுக்குப் பெறும்” என்றார்.

**பதில்பாடல்:** உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்

**நற்செய்தி : மாற்கு 16 : 15 - 18**

அக்காலத்தில் இயேசு அவர்களை நோக்கி, ”உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கைகொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர் நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர் அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர் புதிய மொழிகளைப் பேசுவர் பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்” என்று கூறினார்.

**தியானம்:** மாற்றம் ஒன்றே மாறாததெனினும் சவுல் எனப்பட்ட புனித பவுலடிகளது மனமாற்றம் தொடக்க காலத் திருச்சபையின் வரலாற்றையே புரட்டிப்போட்டதாக இறையியல் வல்லுனர்கள் கருதுகிறார்கள். கோபவெறிகொண்டு கிறிஸ்தவர்களைக் கொலை செய்த பரிசேய வீரர்களது தலைவன் சவுல். தமஸ்கு நகர் வீதிகளில் ஜெகஜோதியான பிரசன்னத்தில் “சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?” (திருத்தூதர் பணி 22:7) என்ற ஆண்டவரது குரல் வழியாக எல்லாம் வல்ல இறைவனைச் சந்திப்பதோடு, அந்த பரிசேய வீரனது வாழ்க்கையே ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியை அறிவிக்கும் திருத்தூதனாக தலைகீழாக மாற்றியமைக்கப்படுகின்றது. பிற இனத்தவரின் திருத்தூதன் என அழைக்கப்படும் தூய பவுல் அடிகளாரின் மனமாற்ற நிகழ்வினை இன்றைய நாளில் அன்னையாம் திருச்சபையோடு நாமும் நினைவு கூருகின்றோம். இயேசு தமது விண்ணேற்றத்தின் பின்னர் நேரில் சந்தித்த முக்கியமானவர்கள் வரிசையில் திருத்தூதர் தோமா போன்று சவுல் எனப்பட்ட புனித பவுலடிகளாரும் முக்கியமானவர் என இறையியலாளர்கள் கருதுகின்றனர். புனித பவுல் அடிகளாரது மனமாற்றம் திருச்சபையின் வரலாற்றிலேயே அதி முக்கியமான சம்பவமாகக் கருதப்படுகின்றது. எமது வாழ்விலும் எத்தனையோ இக்கட்டுக்கள், இடர்களது மத்தியில் ஆண்டவர் எம்மோடு பேசியிருந்தும் அவரது குரலை நாம் இனம் கண்டுள்ளோமா? அல்லது இறைவனின் கருவியாக மாற்றமடையும் அளவிற்கு நாம் எம்மை ஒப்படைத்துள்ளோமா? இதுவே, புலம்பெயர் நாடுகளில் கிறிஸ்தவர்கள் என எம்மை இனம்காட்டும் எமக்கு இன்றைய நற்செய்தியின் வழியாக விடப்படுகின்ற சவாலாகும். எனவே, ஆண்டவர் இயேசுவின் போதனையோ அல்லது புனித பவுல் அடிகளாரது மனமாற்றமோ எமக்குப் புரியாத புதிராகவும் இருக்கலாம். ஆதலால், நவீன விஞ்ஞான உலகப் போக்கிற்கேற்ப எம்மாலே இதனை ஏற்றுக்கொள்வது கடினமாக இருக்கலாம். ஆயினும், தனது அன்புப் பிள்ளைகள் இவ்வுலக காரியங்களால் அணாப்பப்பட்டு தவறான பாதையில் போவதனை ஆண்டவர் இயேசு விரும்பமாட்டார் என்பதனை இன்றைய நற்செய்தியும், புனித பவுல் அடிகளாரின் மனமாற்ற வரலாறும் எமக்குப் படிப்பிக்கும் உண்மைச் செய்தியாகும்.